கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

சர்வதேச
சிறுதானிய ஆண்டு
2023


முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: **14.07.2025**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அசோலா உயிர் உரம் மற்றும் தீவனம்– பேரளவு உற்பத்தி பயிற்சி

தமிழ்நாடு அறிவியல் தொழிநுட்ப மாநில மன்றம் நிதி உதவியுடன், வேளாண் நுண்ணுயிரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை இணைந்து நடத்திய கிராமப்புற விவசாயிகள், தொழில் முனைவோர் மற்றும் பெண்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 'அசோலா பேரளவு உற்பத்தி – உயிர்உரம் மற்றும் தீவனம் என்ற தலைப்பில் நடைபெற்ற மூன்று நாள் பயிற்சியின் தொடக்கவிழா 08.07.2025 (செவ்வாய்க்கிழமை) வேளாண் நுண்ணுயிரியல் துறை கருத்தரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் தொண்டாமுத்தூர் மற்றும் S.S.குளம் வட்டத்திற்கு உட்பட்ட 30க்கு மேற்பட்ட விவசாயிகள், சுய தொழில் முனைவோர் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர். தொடக்க விழாவின் போது வேளாண் நுண்ணுயிரியல் துறை தலைவர் முனைவர், உ.சிவகுமார் அவர்கள் வரவேற்புரை வழங்கி, விருந்தினர்களை சிறப்பு செய்தார். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் செயல் துணைவேந்தர் முனைவர். இரா. தமிழ் வேந்தன் அவர்கள் 'அசோலா' பேரளவு உற்பத்தி பற்றிய பயிற்சியை துவக்கி வைத்து தலைமையுரை ஆற்றினார். அவர் தனது உரையில் விவசாயிகள் உணவு தன்னிறைவை மட்டும் கருத்தில் கொள்ளாமல் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய தன்னிறைவை கருத்தில் கொண்டு அசோலா போன்ற இதர உயிர் உரங்களையும் பயன்படுத்த வலியுறுத்தினார். தொடர்ந்து இயற்கை வள மேலாண்மை இயக்குனர், முனைவர்.ப.பாலசுப்ரமணியம் அவர்கள் தமது சிறப்புரையில் நுண்ணுயிர்கள் ஓர் விதையை செடியாக ஆக்குதல், மண் வளத்தை காத்தல் மற்றும் கழிவுகளை மக்கி உரமாக மாற்றுதல் என ஆக்கம், காத்தல் மற்றும் சிதைத்தல் என மூன்று வேளையிலும் ஈடுபடுகின்றன. எனவே அசோலா போன்ற நுண்ணுயிர் உரங்களை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராக முனைவர், கி, குமார், பேராசிரியர் (ஓய்வு) மற்றும் முன்னாள் இயற்கை வள மேலாண்மை இயக்குனர் தமது உரையில், அசோலா தாவரம் தன்னகத்தே அனபீனா அசோலே என்ற பாசியை கொண்டுள்ளதால் அதிக புரத சத்து மிக்கதாக உள்ளது. மேலும் அசோலாவை எளிதில் உற்பத்தி செய்து உரமாகவும், கால்நடைகளுக்கு ஒரு மாற்று இணை உணவாகவும் பயன்படுத்தலாம். அதைத் தொடக்க விழா நிகழ்ச்சியின் முடிவில் பயிற்சி பெறும் பயனாளிகளுக்கு அசோலா உற்பத்தி பற்றிய பயிற்சி கையிதழும் மற்றும் பயிற்சி பெட்டகமும் வழங்கப்பட்டது. விழாமுடிவில், இப்பயிற்சியின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர்.முஞானசித்ரா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

அன்றைய நாளின் மதியம் அசோலா பற்றிய தொழில்நுட்ப அமர்வு நடைபெற்றது. அதில் முனைவர், கி குமார், பேராசிரியர் (ஓய்வு) அசோலா வளர்ச்சி, இனப்பெருக்கம், ஊட்டச்சத்து, உற்பத்தி மற்றும் அதன் பயன்பாடு குறித்த விரிவான தொழில்நுட்ப விளக்க உரை ஆற்றினார். அதைத் தொடர்ந்து அசோலா ஒரு மாற்று கால்நடை தீவனம் என்ற தலைப்பில் ஆடு, மாடு மற்றும் கோழிகளுக்கு பசுந்தீவனமாகவும், உலர்தீவனமாகவும், வழங்குவது பற்றியும் அதன் விகிதாச்சார அளவு பற்றியும் தனித்தனியாக கால்நடை துறையை சேர்ந்த மருத்துவர்கள் முனைவர், பிரபாகர், முனைவர், திருநாவுக்கரசு, மற்றும் முனைவர் சித்ரா, ஆகியோர் தெளிவாக விளக்கம் அளித்து செயல்விளக்கமும் செய்து காண்பித்தனர்.

இரண்டாம் நாள் –9.7.2025 அன்று தொண்டாமுத்தூர் தொகுதியிலும் மூன்றாம் நாள் 10.07.2025 அன்று S.S.குளம் தொகுதியிலும் அசோலா உற்பத்தி மற்றும் அதன் உயிர்உர பயன்பாடு மற்றும் தீவன பயன்பாடு பற்றியு விரிவான களப்பயிற்சி மற்றும் செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. இறுதியில் பயிற்சியில் கலந்துகொண்ட 30 விவசாயிகள், தொழில் முனைவோர் மற்றும் பெண்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

*மக்கள் தொடர்பு அலுவலர்*